## மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# தி.மு.க. ஆட்சியில் ஆலயங்கள் சீரமைப்பு!

## இந்தியா டுடே ஆங்கில வார ஏடு புகழாரம்!

சென்னை, மே 30-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் ஆலயங்கள் சீரமைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பாராட்டி இந்தியா டுடே ஆங்கில வார ஏடு கட்டுரை வெளியிட்டுள்ளது.

'இந்தியா டுடே' ஆங்கில வார ஏட்டில் (29.5.2023) STALIN'S HINDU POWER என்ற தலைப்பில் அமர்நாத் கே.மேனன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-

மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாநிலத்தில் உள்ள ஆலயங்களை சீரமைக்கத் தொடங்கியுள்ளது. ஆக்ரமிப்பாளர்களிடமிருந்து ஆலயங்களின் நிலங்கள் மீட்கப்படுவது உள்ள பல்வேறு செப்பனிடும் திட்டங்களுக்கு அது முக்கியத்துவம் அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஆலய நிர்வாகங்களை மேற்கொண்டிருக்கும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேகவேகமாய் நோட்டீசு அளித்துக் கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கோயிலுக்கு வருபவர்களுக்கான வசதிகளை அதிகரிக்க பட்ஜெட்டில் அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயில்கள் பற்றி குறிப்பிடுகையில், 'அவை நமது கலை மற்றும் கலாச்சாரத்தின் அடையாளங்கள்; அதன் கலை வடிவங்கள் நமது கலைத்திறனுக்கு உதாரணங்கள். எனவே அவைகளை கட்டிக்காப்பது நமது கடைமையாகும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்தகைய நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் தனது கட்சியையும், புதிய அவதாரம் என்கிற வகையில் கட்டிக்காக்க வேண்டும் என்று நம்புகிறார். தந்தை பெரியார் வலியுறுத்தி வந்த பகுத்தறிவு வாதம் மற்றும் சமுதாய மறுமலர்ச்சி திராவிட இயக்கத்தின் அங்கமாகவே இருந்து வருகிறது.

தி.மு.க.வும் அந்த இயக்கத்தில் உருவானதாகும். இது தொடர்பாக தி.மு.க. பற்றி விமர்சிப்பவர்கள் பற்றி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது இதுதான். ' அவர்கள் எல்லாம் திராவிட கோட்பாடுகள் தெரியாமல் நாங்கள் மதத்திற்கு எதிர் என்று எங்களை விமர்சிக்கிறார்கள். நாங்கள் மத வெறியர்களைத்தான் எதிர்க்கிறோமே தவிர, மதத்தை அல்ல' என்று குறிப்பிடுகிறார்.

ஸ்டாலின் அவர்களின் இந்த எண்ணத்திற்கு ஏற்ற வகையில் செயல்படக்கூடியவராக இருக்கிறார் கடவுள் நம்பிக்கையுள்ள தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு. அவரது தலைமையின் கீழ் இயங்கும் இந்தத் துறையானது இது வரை 45,809 இந்து கோயில்கள் மற்றும் நிலையங்களை ஆய்வு செய்துள்ளது மட்டுமின்றி, கடந்த 2 ஆண்டுகளில் கோயில் நிலங்களில் ஆக்கிரமித்து செயல்பட்டு வந்த 502 மத வழிபாட்டு நிலையங்களை நீக்கியும், 4501.8 ஏக்கர் நிலங்களை மீட்டும், 156 கட்டட நிலங்களை மீட்டும் கோயில் குளங்களையொட்டி உள்ள 132 கிரவுண்டு இடங்களை மீட்டும் செயல்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை சட்டமன்றத்தில் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. அரசு 3177 ஏக்கர் கோயில் நிலங்களை மட்டுமே மீட்டுள்ளது என்று குறிப்பிடும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நடப்பு நடவடிக்கைகள் யாவும் ஆன்மீகப்புரட்சி என்று குறிப்பிட்டுள்ளார்.

வேகவேகமாக செயல்படுவதால் தான் இவ்வாறு மாற்றங்கள் காணப்படுகிறது. உறங்கிக் கொண்டிருந்த இந்து சமய அறநிலையத்துறையை தமிழ்நாடு அரசும், அமைச்சர் பி.கே.சேகர்பாபுவும் விழிப்படைய உந்து சக்தியால் ஊக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று 800 ஆண்டு கால மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வர ஆலய அறங்காவலர் கருமுத்து டி.கண்ணன் தெரிவிக்கிறார்.

ஆலய திட்டங்கள் தொடர்பாக தி.மு.க. அரசின் உண்மையான வரைமுறைகள் தான் என்ன? ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட வேண்டுமானால், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள




45,809 ஆலயங்களில் சுமார் 35 ஆயிரம் ஆலயங்கள் போதிய வருமானமின்றி சுயமாக செயல்பட இயலாத நிலையில் உள்ளன.

அதன் காரணமாக 150 உரிமம் பெற்ற சர்வேயர்கள், கோயில் சொத்துக்கள் குறித்து கணக்கெடுக்க பணிக்கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 4,75,000 ஏக்கரில் இதுவரை அவர்கள் 1,08,000 ஏக்கர் கண்டறிந்துள்ளனர் என்று சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன் தெரிவிக்கிறார்.

ஆவணங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டாலும் DGPS மற்றும் GIS முறையில் நவீன வடிவங்களில் சர்வே மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து கோயில் சொத்துக்களும், நில ஆவணங்களும் அந்தந்த தெய்வங்களின் பெயரிலேயே பதிவு செய்யப்படுகின்றன. அதன் மூலம் தனியாரும், சிறு நிறுவனங்களும் சொந்தம் கொண்டாடப்படுவது தடுத்து நிறுத்தப்படும். இதன் மூலம் பல்வேறு நீதிமன்றங்களில் தவறான நிர்வாகம் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை குறையவும் வழி ஏற்படும்.

முக்கிய சவாலாக இருப்பது ஆக்ரமிப்புகள் தான். 2021 செப்டம்பரில் மாநில அரசு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சட்டத் திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மதரீதியிலான சொத்துக்களை அபகரிப்பவர்கள் அல்லது இட ஆக்ரமிப்பாளர்கள் மீது ஜாமினில் வெளிவர முடியாத குற்றமாகக் கருதப்படும். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆர்வமுள்ள யாரும் புகார் அளிக்கலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.4,226 கோடி மதிப்புள்ள கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இவைகளுக்கிடையே, 1000 ஆண்டுகளுக்கும் முந்தைய சுமார் 600 ஆலயங்களின் தொடர் பராமரிப்பு என்பது கவலைக்குறியதாக உள்ளது. இது குறித்து தொடர்புடையவர்கள் ஏற்கனவே ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.100 கோடி அரசு ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு ஆலயத்திற்கும் ரூ.2 லட்சம் வீதம் 15,000 ஆலயங்களுக்கு ஒதுக்கப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டி மூலம் தினசரி செலவினை ஈடுகட்ட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

நலிவடைந்த ஆலயங்களுக்கு இந்த ஒரு கால பூஜை என்னும் அரசின் திட்டம் என்பது ஒரு பெரிய நடவடிக்கையாகும் என்று ஆன்மீகச் சொற்பொழிவாளர் தேச மங்கையர்கரசி புகழாரம் சூட்டியுள்ளார். இத்திட்டத்தின் மூலம் கோயில் அர்ச்சகர்கள் மாதம் ரூ.500 பெறத் தகுதியுடையவர்களாகும்.

ஆலய வழிபாடுகள் மற்றுமுள்ள நடைமுறைகள் இந்த திட்டத்தால் சீரமைக்கப்பட்டுள்ளன. 560 ஆலய வளாகங்கள் தூய்மைப் படுத்தப்பட்டுள்ளன. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் கும்பாபிஷேகத்தில் இந்த அரசு அக்கறை கொண்டு இதுவரை 650 ஆலயங்களில் குடமுழுக்கு நடந்துள்ளது. ராஜகோபுரங்களையும், ஆலயத் தேர்களையும் சீரமைப்பதில் முனைப்பு காட்டப்படுகிறது. 854 ஆலயங்களில் இருந்து 1097 மரத்தேர்கள் பழுதாக இருந்த நிலையில் அவைகள் முதல் கட்டமாக ரிப்பேர் செய்யப்பட்டுள்ளன. 16 கோயில்களுக்கு புதிய தேர்கள் செய்யப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தில் ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டு, பல்வேறு ஆலயங்களில் கண்டெடுக்கப்பட்ட பழங்கால பனை ஓலைகளை பாதுகாப்பது, அவைகளை டிஜிட்டல் மயமாக்குவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று முதன்மைச் செயலாளர் சந்திரமோகன் தெரிவித்தார்.

இதுபோன்ற இந்துக்களுக்கு ஆதரவான அரசின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை.

பா.ஜ.க. உள்ளிட்ட பலதரப்பினர் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரசின் கட்டுப்பாட்டில் ஆலயங்கள் இருக்கக்கூடாது என்று வாதிடுபவர்களும் உண்டு. ஆனால் அமைச்சர் பி.தியாகராஜன் இதை மறுத்துள்ளார். ஆலயங்கள் தனியார் வசம் இருக்க வேண்டும் என்பவர்கள், அதற்காக எதையும் செய்யாதவர்கள் என்பது அவரது கருத்து.

ஆலயங்களை நிர்வகிக்கும் சட்டம் ஏறத்தாழ நூறாண்டு கால பழைமை வாய்ந்தது. 1927-ஆம் ஆண்டு பி.டி.ஆரின் தாத்தா எம்.டி.சுப்ரமணிய முதலியார் தான் இந்த இந்து சமய அறநிலைய சட்டம் கொண்டு வருவதில் முக்கியப் பங்காற்றியவர். நீதிக்கட்சி இந்தச் சட்டத்தை கொண்டு வந்ததுடன், ஆலயங்களுக்கு நிர்வாக அதிகாரிகளையும் நியமித்தது.

குறிப்பிட்ட ஒரு சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும், அப்போது மதராஸ் பிரசிடென்சி முதல்வராக இருந்த ராமராயனிங்கர் பிரிட்டிஷ் வைஸ்ராய் லார்ட் இர்வினை சமாதானம் செய்து இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் பெற்றார்.

சுதந்திரத்திற்குப் பிறகு, மதராஸ் இந்து சமய அறக்கட்டளை சட்டம் 1951 என்பது இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை உருவாக காரணமாக இருந்தது. பரம்பரை ஊழியர்களின் முறை, இந்து ஆலயங்கள் மற்றும் மடங்களின் மேற்பார்வை உரிமை மாநில அரசிடம் சென்றுவிடும் என்று குறிப்பிட்டு துவக்கத்தில் இச்சட்டத்திற்கு எதிர்ப்பு இருந்தாலும், சில ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையம் 1959 என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது.

கடந்த சில ஆண்டுகளாக இத்துறை மீதான நடவடிக்கைகள் சரியாக இல்லை. இன்றைய தினம் ஆண்டு வருமானம் ரூபாய் 10 லட்சத்திற்கும் மேலுள்ள 560 ஆலயங்களில் அறங்காவலர்கள் நிரப்பப்பட்டு வருகிறார்கள். மே மாத இறுதிக்குள் 38 மாவட்டங்களில் உள்ள கோயில்களின் அறங்காவலர்களின் பணி நிரப்பப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. துறைகளின் மேற்பார்வையில் அறங்காவலர்கள் ஆலய நிர்வாகத்தை மேற்கொள்வார்கள்.

ஒவ்வொரு நாளும் 6 லட்சம் முதல் 8 லட்சம் வரை மக்கள் ஆலயங்களுக்குச் செல்கிறார்கள். வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் விழாக் காலங்களிலும் இன்னும் அதிகமாகச் செல்கிறார்கள் என்பதால், ஆலயங்கள் பற்றி அரசு கவனம் கொண்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 13 கோடியே 40 லட்சம் பேர் முக்கிய கோயில்களுக்கு சென்றுள்ளதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு அதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆலய சேவை என்பதன் மூலம் ஆங்காங்குள்ள விருந்தினர் மாளிகைகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. சுகாதார மையங்களையும் நிறுவி கோவிலுக்கு வருபவர்களுக்கு உதவி வருகிறது.

பழனி, கோவை, திருக்கழுக்குன்றம் மலை கோயில்களில் ரோப் கார்கள் அமைத்து பக்தர்களுக்கு உதவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சுய தேவை ஆலயங்களில் அடிப்படைத் தேவைகளான தண்ணீர் வசதி, திடக்கழிவு பிளாண்ட், சோலார் விளக்கு உள்ளிட்ட வசதிகள் எல்லாம் மக்கள் தொடர்புடையவை என்று குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மக்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதால் நன்கொடைகளும் தாராளமாக கிடைக்கின்றன என்று சந்திரமோகன் தெரிவித்தார். நன்கொடை மூலம் பணிகள் மேற்கொள்ளவும் ஏதுவாக அமைகின்றன.

இந்து நம்பிக்கையால் ஆலய மீட்பு நடவடிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்வதைப்பார்க்கும்போது தனது அரசின் மீதும் நம்பிக்கை வைக்க மக்களை அழைக்கிறார் என்றே தெரிகிறது.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை அரசு மருத்துவமனையில் நேற்று (29.05.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் எர்ணாபுரம், பச்சுடையாம்பட்டி புதூர், நாமகிரிப்பேட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் எ.கே.பி.சின்ராஜ், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

## அசாமில் மிதமான நிலநடுக்கம்! ரிக்டர் அளவில் 4.4 ஆக பதிவு!

சோனித்பூர், 30 -

அசாமில் நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.4 ஆக பதிவானது.

கவுகாத்தி, வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அசாமில் நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

அசாமின் சோனித்பூர் பகுதியில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் லேசாக அதிர்ந்ததை உணர முடிந்ததாக மக்கள் தெரிவித்தனர். நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை.

## இட ஒதுக்கீடு எனது உரிமை - சிறப்பாக பேசிய

# திருவாரூர் மண் ஈன்றெடுத்த தே.நர்மதாவுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, மே 30-**

**'இட ஒதுக்கீடு எனது உரிமை' என்ற தலைப்பில் 'தமிழ் பேச்சு எங்கள் மூச்சு' என்ற நிகழ்ச்சியில், சிறப்பாகப் பேசிய திருவாரூர் மண் ஈன்றெடுத்த தே.நர்மதாவிற்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

"இடஒதுக்கீடு எனது உரிமை" என்ற தலைப்பில் விஜய் தொலைக்காட்சியின் "தமிழ்ப்பேச்சு எங்கள் மூச்சு" நிகழ்ச்சியில் திருமிகு தே.நர்மதா அவர்களின் உரையை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சொற்களுக்கு உயிர் இருக்கிறது. இனமான பகுத் தறிவு உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் வல்லமை கொண்டது பேச்சுக்கலை.

அதனால்தான் "தமிழ்ப்பேச்சு எங்கள் மூச்சு" நிகழ்ச்சியை விஜய் தொலைக்காட்சி தொடங்கும்போது, "பேச்சுக்கலை என்பது பழைய மூடநம்பிக்கைகளைப் பாடி, பிற்போக்குத்தனத்தைப் போற்றுவதற்குப் பயன்படக் கூடாது. நகைச்சுவை என்ற பெயரில் அடுத்தவரை மட்டம் தட்டுவதாக இருக்கக் கூடாது. பகுத்தறிவையும், அறவுணர்வையும் வளர்த்து, முற்போக்கான சமூகத்துக்கு வழிவகுப்பதுதான் சிறந்த பேச்சுக்கு இலக்கணம்! பயனற்றவற்றைத் தவிர்த்து, பகுத்தறிவை வளர்க்கும் நோக்கத்தை இந்த நிகழ்ச்சி பின்பற்றும் என்று நான் மனதார நம்புகிறேன்" என வாழ்த்தினேன்.

**எனது நம்பிக்கையை மேலும் அதிகரிக்கும் வகையில் "இடஒதுக்கீடு எனது உரிமை" என்ற தலைப்பில் உரையாற்றிய தே.நர்மதா அவர்களின் உரை அமைந்திருந்தது. கருத்து செறிந்த அவரது உரை வீச்சில் நூற்றாண்டு கால இடைவெளியைச் சுட்டிக்காட்டிய அவரது சொற்களுக்கு உயிர் இருக்கிறது. என் திருவாரூர் மண் ஈன்றெடுத்த அவரை வாழ்த்துகிறேன்!**

**அனைவரும் சொல்வோம் இடஒதுக்கீடு நமது உரிமை!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## சென்னை மாநகராட்சியில் மக்களைத் தேடி மேயர்!

# பொதுமக்களிடம் மேயர் பிரியா மனுக்களை பெறுகிறார்!

*சென்னை, மே 30-*

*பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா 2023-24ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பொது மக்களின் குறைகளை கண்டறிந்து, அவற்றின் மீது உடனடி தீர்வு காணும் வகையில், "மக்களைத் தேடி மேயர்" என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் என அறிவித்தார்.*

*அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகளை களையும் பொருட்டு, "மக்களைத் தேடி மேயர்" திட்டம் 03.5. 2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, மண்டலம்5க்குட்பட்ட பொதுமக்களிட மிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த சிறப்பு முகாமில் சாலை வசதி, பள்ளிக் கூடத்தில் கட்டிட வசதி, சமுதாயக் கூடம் மேம்பாடு, மழைநீர் வடிகால் வசதி, குடியிருப்பு வசதி, பிறப்பு/இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு ஏற்கப்பட்ட 331 கோரிக்கை மனுக்களில் 272 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளது. இதர கோரிக்கை மனுக்கள் தொடர்புடைய துறைகள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளது.*

*இதனைத் தொடர்ந்து, "மக்களைத் தேடி மேயர்" திட்டத்தின் கீழ், திரு.வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் 31.05.2023 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மேயர் ஆர். பிரியா மண்டலம் 6க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து நேரடியாக கோரிக்கை மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்கிறார்.*

*எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட பொதுமக்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மின் விளக்கு, கழிப்பிடம், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், சொத்துவரி மற்றும் தொழில் வரி, குப்பைகள் அகற்றம், ஆக்கிரமிப்பு அகற்றுதல், பூங்கா மற்றும் விளை யாட்டுத் திடல் உள்ளிட்ட மக்களுக்கு தேவை யான அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கை மனுக்களை மேயரிடம் நேரடியாக வழங்கி பயன டைந்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*


19-ம் ஆண்டு நினைவு அஞ்சலி




திருமதி. கமலா அரங்கநாதன்
நினைவு தினம் 16-05-2004
திரு. மு. அரங்கநாதன் Ex. M.L.A.
நினைவு தினம் 30-05-2004
என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்
The Graphic Design Shop & Cuckoo Garden
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாகை அ. அம்பலவாணன்

## மே 30 (2020)



**கழகம் துவக்கப்பட்ட 1949ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞரை அழைத்து, நாகை, ஆழியூரில் பொதுக்கூட்டம் நடத்தியவர். 1961–ல் சிக்கலில் கிளைக் கழகத்தை இவர் உருவாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களே நேரடியாக கிளை அலுவலகம் வந்து, கிளை குறிப்பேட்டில் கையொப்பமிட்டு சென்றார்.**

**கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், நாகை மாவட்டச் செயலாளர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.**

**தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவராக பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2017ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில்'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**